செ. கு. எண்:280 நாள்:18.10.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – **18.10.2013**

திருநெல்வேலி **மாவட்டம்,** தாமிரபரணி பாசன அமைப்பிலுள்ள நேரடி மற்றும் மறைமுகப் பாசனப் பகுதிகளின் பிசான பருவ சாகுபடிக்கு **பாபநாசம், சேர்வலார் மற்றும் மணிமுத்தாறு அணைகளிலிருந்து** தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, தாமிரபரணி பாசன அமைப்பிலுள்ள வடக்கு கோடை மேலழகியான் கால்வாய், தெற்கு கோடை மேலழகியான் கால்வாய், நதியுண்ணி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், பாளையங்கால்வாய், திருநெல்வேலி கால்வாய் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மருதூர் மேலக்கால் கால்வாய், மருதூர் கீழக்கால் கால்வாய், தெற்கு பிரதான கால்வாய் மற்றும் வடக்கு பிரதான கால்வாய் ஆகிய கால்வாய்களின் கீழ் உள்ள நேரடி மற்றும் மறைமுகப் பாசனப் பகுதிகளின் பிசான பருவ சாகுபடிக்கு **பாபநாசம், சேர்வலார் மற்றும் மணிமுத்தாறு அணைகளிலிருந்து 20.10.2013 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள **86,107 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**